Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　Peoples Daily　　மக்கள் தினசரி

நாதம் 03　　திருவள்ளுவர் ஆண்டு 2023　　ஆவணி 30　　(15 - 09 - 1992)　　செவ்வாய்க்கிழமை　　ஓசை 210

## பாடசாலையில் சேரும் மாணவர் தொகையில் வீழ்ச்சி

1991 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1992 இல் இலங்கை பூராகவுமுள்ள பாடசாலைகளில் புதிதாகச் சேர்ந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக கல்வித் திணைக்களத்தில் மதிப்பீடொன்று காட்டுகின்றது கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மாணவர் தொகை 44,388 இனால் குறைந்துள்ளது 1991 இல் 41 28.211 மாணவர்கள் பாட சாலைகளில் கல்விபயின்று வந்தனர். இந்த ஆண்டு 40,83,823 பேரே கல்வி பயில்கின்றனர் இலவச சீருடை விநியோகத்திற்காகவே இம்மதிப்பீடு செய்யப்பட்டது. மாணவர் தொகை குறைந்ததற்கான காரணங்கள் ஆராயப்பட்டு வருவதாய் தெரியவருகிறது

# இராணுவத்திலிருந்து விலகல் அதிகரிப்பு

# லீவில் சென்றவர்கள் மாயமாய் மறைவு

## முப்படைக்கு ஆட்சேர்ப்பதில் அரசு எதிர்கொள்ளும் நெருக்கடி

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவத்திலிருந்து சிப்பாய்கள் ஓடுவது மேலும் அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. லெப் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரெட்னா ஆகியோரின் இழப்பின் பின்னர், இந் நிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதே வேளை, இராணுவத்தில் புதிதாகச் சேருவதற்கு சிங்கள இளைஞர்கள் தற்பொழுது முன் வருவதில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சிறிலங்கா இராணுவத்தில் இருந்து கடந்த காலத்தில் 7000கரும் மேற்பட்ட இராணுவத்தினர் ஓடியுள்ளமை தெரிந்ததே இந்நிலை தற்பொழுது மேலும் தீவிரமடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இராணுவம் தமது எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்த எண்ணியுள்ள இவ் வேளையில் இராணுவத்திலிருந்து ஓடுவோர் தொகை மேலும் அதிகரித்துள்ளமை இராணுவத் தலைமைக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

புதிய தாக்குதல்களை நடத்தவும், சிங்களவர் குடியேறிய வவுனியா, திருமலை, அம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோசப் முகாமிலிருந்து 15 இராணுவத்தினர் ஓட்டம்

[வவுனியா]

வவுனியா இராணுவ முகாம் ஒன்றிலிருந்து பல இராணுவத்தினர் தலைமறைவானார்கள் இதை அடுத்து சிறிலங்கா இராணுவத்தினர் பொலிசாருடன் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். ஆயினும் எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்டுகின்றது.

வவுனியா ஜோசப் முகாமில் இருந்தே இராணுவத்தினர்

கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற இந்தத் தலைமறைவு நடவடிக்கையினால் வவுனியா நகரம் அல்லோலகல்லோலப் பட்டது. எங்கும் படையினரின் தேடுதல் நடவடிக்கையை காணக்கூடியதாக இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவத்திற்கு ஆட்சேர்க்க

## படையினர் பலியாவதால் நடவடிக்கை குறைப்பாம்

[கொழும்பு]

படையினர் தொடர்ந்து பலியாவதனாலேயே இராணுவ நடவடிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரத்தில் திருக்கோணமலைப் பகுதியில்

## தியாகி திலீபன் நினைவு நாள் உணர்வு பூர்வமாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தாயகத்தின் விடுதலைக்காக தியாக மரணமடைந்த தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்கள் இன்று



உணர்வு பூர்வமாக ஆரம்பமாகின்றது.

இவ் நினைவு நாட்களை ஒட்டி தமிழீழம் இன்று முதல் இருபத்தியாறாம் திகதி வரை தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்த உள்ளது.

அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பொது இடங்கள், சன சமூக நிலையங்கள், பாடசாலைகள், அரச, தனியார் அலுவலகங்கள் வீடுகள் போன்ற இடங்களில் அலங்கரிக்கப்பட்ட விசேட பந்தல்களில் தியாகி திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு அணையாத தீபங்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளில் முதியோர்கள் இளைஞர்கள் சிறுவர்கள் என வயது வேறுபாடின்றி குடாநாடுமுழுவதும் நேற்று ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது- வட்டப் பிரிவுரீதியாக நினைவு உரைகளும், உண்ணா விரத நிகழ்வுகளுக்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது இதற்கென அலங்கார பந்தல்கள் குறிக்கப்பட்ட இடங்களில் நேற்று அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன அத்துடன் பல்வேறு இடங்களில் பல சிரமதான நிகழ்ச்சிகளிற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

பல இடங்களில் தியாகி திலீபனின் நினைவஞ்சலிக்கூட்டங்களும் நடைபெற உள்ளது. இவ் அஞ்சலிக் கூட்டங்களில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

## தியாகி திலீபன் நினைவு

## வீரச்சாவு



வீரவேங்கை கதிரவன்



இராணுவத்தில் புதிதாகச் சேருவதற்கு சிங்கள இளைஞர்கள் தற்பொழுது முன் வருவதில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சிறிலங்கா இராணுவத்தில் இருந்து கடந்த காலத்தில் 7000கரும் மேற்பட்ட இராணுவத்தினர் ஓடியுள்ளமை தெரிந்ததே இந்நிலை தற்பொழுது மேலும் தீவிரமடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இராணுவம் தமது எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்த எண்ணியுள்ள இவ்வேளையில் இராணுவத்திலிருந்து ஓடுவோர் தொகை மேலும் அதிகரித்துள்ளமை இராணுவத் தலைமைக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

புதிய தாக்குதல்களை நடத்தவும், சிங்களவர் குடியேறிய வவுனியா, திருமலை, அம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோசப் முகாமிலிருந்து 15 இராணுவத்தினர் ஓட்டம்

[வவுனியா]

வவுனியா இராணுவ முகாம் ஒன்றிலிருந்து பல இராணுவத்தினர் தலைமறைவானார்கள் இதை அடுத்து சிறிலங்கா இராணுவத்தினர் பொலிசாருடன் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். ஆயினும் எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்டுகின்றது.

வவுனியா ஜோசப் முகாமில் இருந்தேஇராணுவத்தினர் ஆயுதங்கள் சகிதம் சுமார் பதினைந்து பேர் தலைமறைவானார்கள் என்று அறியப்பட்டுகிறது.

இவர்கள் தென்பகுதி சிங்களக் கிராமங்களை நோக்கித் தப்பி ஓடியிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது

கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற இந்தத் தலைமறைவு நடவடிக்கையினால் வவுனியா நகரம் அல்லோலகல்லோலப் பட்டது. எங்கும் படையினரின் தேடுதல் நடவடிக்கையை காணக்கூடியதாக இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவத்திற்குஆட்சேர்க்க அரசு மீண்டும் முயற்சி

சிறிலங்கா இராணுவத்தினரின் நிரந்தர இராணுவ சேவைக்கு புதிதாக ஆட்களைச் சேர்ப்பதற்கு அரசு முயற்சிகளை எடுத்து வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிககின்றன.

இதற்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இம் மாதம் 25, 26, 27, ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## படையினர் பலியாவதால் நடவடிக்கை குறைப்பாம்

[கொழும்பு]

படையினர் தொடர்ந்து பலியாவதனாலேயே இராணுவ நடவடிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரத்தில் திருக்கோணமலைப் பகுதியில் இடம் பெற்ற மூன்று வெவ்வேறு சம்பவங்களில ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் விரும்ப

[4 ஆம் பக்கம் மார்க்க]



உணர்வு பூர்வமாக ஆரம்பமாகின்றது,

இவ் நினைவு நாட்களை ஒட்டி தமிழீழம் இன்று முதல் இருபத்தியாறாம் திகதி வரை தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்த உள்ளது.

அனைத்துப் பகுதிகளிலும் செலுத்தப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளில் முதியோர்கள் இளைஞர்கள் சிறுவர்கள் என வயது வேறுபாடின்றி குடாநாடுமுழுவதும் நேற்று ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது- வட்டப் பிரிவுரீதியாக நினைவு உரைகளும், உண்ணா விரத நிகழ்வுகளுக்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது இதற்கென அலங்கார பந்தல்கள் குறிக்கப்பட்ட இடங்களில் நேற்று அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன அத்துடன் பல்வேறு இடங்களில் பல சிரமதான நிகழ்ச்சிகளிற்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கிறது.

பல இடங்களில் தியாகி திலீபனின் நினைவஞ்சலிக்கூட்டங்

## தியாகி திலீபன் நினைவு சிரமதானப் பணிகள்

[யாழ்ப்பாணம்]

தியாகிலெப்டினன்ட்கேணல் திலீபனின் 5ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று பல சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பருத்தித்துறை வட்டப் பிரிவில் கெருடாவில் தெற்கு பொதுக்கிணறு கெருடாவில் தெற்கு சனசமூக நிலையத்தினரின் ஆதரவில்புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

இதேவேளை இன்று முதல் எதிர்வரும் 25ஆம் திகதிவரை கைதடி வட்டப்பிரிவில் நாவற்குழி பாடசாலைக்கருகாமையிலுள்ள குளமொன்று பொதுமககளால் திருத்தியமைக்கப்படவுள்ளது.



வீரவேங்கை கதிரவன்



வீரவேங்கை ஒளியன்

மணலாற்றுப் பகுதியில் கடந்த 13 ஆம்திகதி ஏற்பட்ட வெடிவிபத்தில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த வீரவேங்கை ஒளியன் [மிமி] (தெய்வேந்திரன்- இராஜதேவன்-நவாலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மாதம் 25 கோடிரூபா தேவை

வடக்கு கிழக்கு அகதிகளுக்கு உலர் உணவு மட்டும் வழங்க மாதாந்தம் 25 கோடி

[4 அம் பக்கம் பார்க்க]

### காலை ஒலிபரப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நினைவு தினத்தையொட்டி இன்று முதல் புலிகளின் குரல் காலை ஒலிபரப்பு 6-15க்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு-கிழக்கு பிரதேசத்திற்கென விசேட ராணுவ புலனாய்வுப் பிரிவு

## பிரிகேடியர் லக்கி அல்கம சூத்திரதாரி

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் விரைவில் விசேட இராணுவப் புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகள் ஏற்படுத்தப் படும் எனத் தெரியவருகிறது.

தற்போது கிழக்குப் பிராந்தியத் தளபதியாக உள்ள பிரிகேடியர் லகீ அல்கமவின் யோசனைப்படியே இவ் அமைப்பு உருவாக்கப்படவுள்ளது

கடந்த காலத்தில் தெற்கில் ஜே வி.பி யின் நடவடிக்கைகளை அழித்தொழிப்பதற்கும் இத்தகைய விசேட புலனாய்வு அமைப்பொன்று உருவாக்கப்பட்டிருந்தது இதன் மூலம் எதிர் காலத்தில் வடக்குக் கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை மிகத் துல்லியமாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இராணுவத் தலைமையகத்தில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு அனுசரணையாக இவ் புதிய அமைப்பு செயற்பட்டு வரும்.

வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் வெற்றிக்கு காரணமாய் இருந்த முதன்மையான இராணுவ அதிகாரிகளும், ஜே வி. பி.நடவடிக்கைகளை அழிக்க தெற்கில் செயற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### இலங்கையர் மரணத்தில் மர்மம்

கனேடியச் சிறையில் இறந்து போன இலங்கைத் தமிழரான சாந்தகுமார்குமாரசுவாமியின் மரணம் பற்றிய மர்மம் நீடிப்ப

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ராணுவ நடவடிக்கையின் நோக்கத்தை மக்களுக்கு தெரியப்படுத்துக

## ஐலன்ட் கோரிக்கை

(கொழும்பு)

என்ன நோக்கததை அடைவதற்காக இராணுவம் இந்தப் போரை தொடர்ந்து நடத்துகின்றது என்பதை நாட்டு மக்களுக்கு தெரியப்படுதத வேண்டிய நேரம வந்துவிட்டதாக ஐலன்ட வார இதழ் தனது ஆசிரிய தலையங்கத்தில் கூறியுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் பேச்சுவார்த்தை மேசைக்கு இழுதது வரமுடியுயா? விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் மேலும் முன்னேறி பெருமளவு உயிர் மற்றும் வளங்களின் இழப்புக்களின்றி றியல் எஸ்டேட போல நிலங்களைப் பெற முடியுமா? என்பவற்றிறகெல்லாம் இராணுவம் இடபோதாவது பதில் கூற வேண்டும்

இதேவேளை சர்வகட்சி மாநாட்டு அறிக்கைகள் அலுமாரிகளுள் போய்விட்ட நிலையிலும், மங்கள முனசிங்கா குழு தீர்வைத் தரும் என்ற நம்பிக்கை குறைவடைந்து வரும் வேளையிலும பிரதான கடசிகளான ஐ தே க விற்கும், சிறிலங்கா சு. கட்சிக்கும் இடையே இணக்கப்பாடு இல்லாமல் இனப்பிரச்சனை தீர்க்கபபட முடியாது என்பது தெளிவாகிறது. அத்துடன் வடக்கு, கிழக்கு இணைப்பு விட்டுக்கொடுக்கபபட முடியாதது என்ற தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டிற்கும் முஸ்லிம்களுககும் இடையே இணக்கம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வன்னியில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் ஓட்டம்

## தடுத்து நிறுத்த இராணுவம் முயற்சி

வவுனியா மாவட்ட சிங்கள குடியேற்றங்களிலிருந்து பெருமளவு சிங்கள மக்கள் வெளியேறி வருவதாகத் தெரியவருகிறது

அண்மைக் காலங்களில் இப்பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாம்கள் மீதும் காவலரண்கள் மீதும்ரோந்து அணிகள் மீதும் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதல்களினால் தமக்கு பாதுகாப்பு இல்லை என கருதிய இவர்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

இவ்வாறு சிங்களவர்கள் வெளியேறுவதை தடுக்க இராணுவம் முயற்சி எடுத்து வருகின்றபோது அவ்வாறு வெளியேறுவதை தடுக்க முடியவில்லை எனவும் தெரியவருகிறது

இதேவேளை வடக்கில் சிங்களக் குடியேற்ற கிராமங்களைப் பாதுகாப்பதற்காக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு வெளியே செல்ல வழங்கப்பட்ட வர்த்தக அனுமதியை புதுப்பிக்க வேண்டுகோள்

புரட்டாதி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வடபகுதிக்கு வெளியே செல்வதற்கு வழங்கப்பட்ட சகல வர்த்தக (நிரந்தர) அனுமதி அட்டைகளும் 30 - 09 - 92 அன்றுடன் ரத்துச் செய்யப்படுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் புரட்டாதி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்ற வர்த்தக (நிரந்தர) அனுமதி அட்டைகளை புதிதாக விண்ணப்பம் செய்

[4 ஆம் பக்கம் பார்க்க]

**நீரினைத் தேக்கி ஊரினைக் காப்போம்**

## வரி விளம்பரம்


### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு எமக்கு வேறு கிளைகள் கிடையாது. டில்கா வாச்வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி/4964)

### தவறிவிட்டது

13-09-92 இல் மகாதேவக் குருக்களுக்குச் சொந்தமான திகதி முடிவடைந்த (பழைய) இங்கிலாந்து காசுக்கட்டளை ஒன்று உரிய கடிதத்துடன் தவறவிடப்பட்டு விட்டது இதைக் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து 834, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3177)


### நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஈச்சமோட்டை கலட்டிப்புலம் சிறி ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலனசபையின் 41-வது பொதுக் கூட்டம் தற்காலிகத் தலைவர் க. பால சுப்பிரமணியம் தலைமையில் கூடியபோது நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ச. தவசீலன், உப தலைவர் சண்முகராசா, செயலாளர் து. கமலநாதன், உப செயலாளர் மு. பத்மநாதன், நிர்வாக உறுப்பினர்கள் க. யோகரட்ணம், ந. சிவபாதசுந்தரம், போஷகர்கள் சோ. யோகநாதன், இ. பரராஜசிங்கம் கணக்காய்வாளர் ம. இரவீந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### மாநகரசபை மேயர் உறுப்பினர் மோதல்

[மாத்தளை]

மாத்தளைமாநகரசபை மேயரும் ஐ. தே. கட்சி உறுப்பினர் ஒருவரும் ஒருவரையொருவர் தாக்க முற்பட்டதாக பொலிசில் புகாரிடப்பட்டுள்ளது. இது குறித்து விசாரணை நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

### மட்டு நகர் திருமணவீட்டில் கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் திருமண வீடொன்றினுள் நள்ளிரவு வேளையில் பிரவேசித்த இரு முகமூடி நபர்கள் அவ்

# பூஸா சிறைக் கைதிகளை மகசீனுக்கு மாற்ற கோரிக்கை

(கொழும்பு)

பூசா, பெலவத்தை தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகள் 34 பேரையும் மகசீன் சிறைச்சாலைக்கு இடமாற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்று சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் டி. பி. விஜயதுங்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2983 சிங்கள கைதிகள் வைக்கப்பட்டுள்ள இவ்விரு தடுப்பு முகாம்களிலும் 34 தமிழ்க் கைதிகளும் ஒன்றாக காவலில் உள்ளனர். மொத்த கைதிகளில் ஒரு சத வீதத்தினரே அங்கு தமிழர்களாக உள்ளனர். கடந்த காலத்தில் பூசா, பெலவத்தை தடுப்பு முகாம்களில் ஏற்பட்ட மோதல்களில் சில கைதிகள் கொலை செய்யப்பட்டுள்ளனர் இதன் காரணமாக இந்த முகாம்களில் மிகக் குறைந்த சிறுபான்மையினராக உள்ள தமிழ்க் கைதிகளின் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ளது. பயத்துடனும், பீதியுடனும் அவர்கள் வாழ்கின்றனர் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூசா தடுப்பு முகாமில் மொத்தம் 1820 கைதிகள் உள்ளனர். இவர்களில் 1796 பேர் சிங்கள இனத்தவர். தமிழர்கள் 21 பேரும், முஸ்லிம்கள் மூவரும் அங்கு உள்ளனர். பெலவத்தை முகாமில் எல்லாமாக 1230 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இவர்களில் 1187 பேர் சிங்களவர்கள் 31 தமிழர்களும், 30 முஸ்லிம்களும் அங்கு உள்ளனர்.

காவலில் இருக்கும் தமிழர்கள் மட்டக்களப்பு, பதுளை, மன்னம்பிட்டி மாத்தளை, வவுனியா பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பலவந்தமாக அனுப்பும் எண்ணமில்லை

கொழும்பில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருப்போரை பலவந்தமாக அனுப்பும் எண்ணம் அரசுக்கு கிடையாதென புனர்வாழ்வு புனரமைப்புசமூகநலத்துறைஅமைச்சர் பி. தயாரதன தெரிவித்துள்ளார்

சுயவிருப்பத்தின் பேரில்மீளக் குடியேற கொழும்பில் உள்ள அகதிகள் எவரும் எண்ணம் கொண்டிருந்தால் அதுகுறித்து அவர்களின் மாவட்ட அரச அதிபருடன் கலந்தாலோசித்த பின்னரே அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்.

## சிறிலங்காவிற்கு இந்தியா 6 கோடி ரூபா கடனுதவி

சிறிலங்காவிற்கு இந்தியா 6 கோடி ரூபா கடன் உதவி வழங்கவுள்ளதெனத் தெரியவருகிறது

சிறுகைத்தொழில் துறைக்கு தேவையான பொருள்களை இறக்குமதி செய்யவே இக் கடன் உதவி பயன்படுத்தப்படும் எனத் தெரிகிறது

## அதிகளவில் நகையணிவோர் திருப்பி அனுப்பபடுகின்றனர்

(வவுனியா)

தங்க நகைகளில் இராணுவம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. அளவிற்கு மிஞ்சி நகைகள் அணிந்துவரும் பெண்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் சோதனையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரும் பொலிசாரும் தங்க நகை விஷயங்களில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்

கொழும்பிலிருந்து அதிகளவில் நகை அணிந்து வரும் பெண்கள் திருப்பி கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். (தி)

## கொக்கட்டிச்சோலை படுகொலை
## 20 இராணுவத்தினர் மீது விசாரணை நடத்தப்படும்

கடந்த வருடம் யூன் மாதம் 12 ஆம் திகதியன்று 67 தமிழ்ப் பொது மக்கள் கொக்கட்டிச் சோலையில் கொல்லப்பட்டது தொடர்பாக இள நிலை அதிகாரிகள் உட்பட 20 இராணுவத்தினர் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட இராணுவ நீதிமன்றமே விசாரணையை மேற்கொள்ள உள்ளது. செப்ரெம்பர் 22 ஆம் திகதி தற்போது படையினர் தங்கியுள்ள மட்டக்களப்பு பழைய மாநகர சபைக் கூட்டத்திலேயே விசாரணை நடைபெறுமென இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## அமெரிக்க தூதரகத்தினுள் தோட்டாவுடன் நுழைந்தார்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தினுள் ரைபிள் தோட்டாக்களுடன் நுழைய முயன்ற வேளையில் அமெரிக்கப் பிரஜையான இலங்கையர் ஒருவர் தூதரக பாதுகாப்பு அதிகாரிகளால் பொலிசிடம் ஒப்படைக்கப்பட்டார்.

களனியைச் சேர்ந்த அதிகாரிகே தொன்கனத் விஜித பெரேரா என்பவர் அமெரிக்கத் தூதுவரைச் சந்திக்க வேண்டும் எனக் கூறிக்கொண்டு அமெரிக்க தூதரகத்துக்கு சென்றார் என்றும், அவரிடம் இருந்த ப்ரீப் கேஸை பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையிட்டனர் என்றும், அப்போது நான்கு ரைபிள் தோட்டாக்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்றும் இதனை அடுத்து அவர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

சந்தேக நபர் தீவிரவாத இயக்கம்ஒன்றுடன் தொடர்புடையவரா என்பதை கண்டறிய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரவில தடுப்பு முகாமில் தொடர்ந்து உண்ணாவிரதம்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம் 03 – 05 – 1976



வீரச்சாவு 15 – 09 – 1991

### வீரவேங்கை ஜெகன்

(ஜெயநாதன் ஜெறோம்)

வரலாற்றுக் கட்டத்தின் கட்டளையை உன்னால் அசட்டை செய்ய முடியாமல் போய்விட்டதா?
நாட்டிற்காக உயிரைக் கொடுப்பது தவிர்க்க முடியாத கடமையாகக்கருதினாய்.

தமிழீழத்தின் வாலிபர் மட்டுமல்ல சிறுவர்களும் உயிரைக் கொடுக்கின்றார்கள்.

இவருடன் மணலாற்றில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கங்கள்.

25, மடம் வீதி, அம்மா, அப்பா,

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1951-02-27

மறைவு 1992-08-16



### செல்வி சுகிர்தம் நாராயணசாமி

[மக்கள் வங்கி நவீன சந்தை கிளை]

எமது இதயங்களில் என்றும் நிலைத்திருக்கும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

(3148)

நலன்புரிச்சங்கம்
நவீன சந்தை கிளை
மக்கள் வங்கி யாழ்ப்பாணம்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 1968-02-03

வீரச்சாவு 1989-09-5

### கப்டன் அக்காச்சி (ஜெகன்)

(சிவகுருநாதன் சிறீகாந்தன்)

இளம்புலி வீரன இவனை இழந்து
ஆண்டுகள் மூன்று ஆனது இன்று
அன்பினில் எமது நெஞ்சினில் நிறைந்த
அக்காச்சி இவனுக்கு அஞ்சலிசெலுத்துகின்றோம்

-அக்காச்சி எழுச்சிக்குடியிருப்பு மக்கள்

அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு
வாதரவத்தை. (3172)

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 15

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்க் கர்ப்பிணிப் பெண்.

1989 ஆம் ஆண்டு திருக்கோணமலை - கொத்திக்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

(அங்கோவிச்சாமி உதயகுமார் - 3-ம்

சிங்கம் கணக்காய்வாளர் ம. இரவீந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### மாநகரசபை மேயர் உறுப்பினர் மோதல்

[மாத்தளை]

மாத்தளைமாநகரசபை மேயரும் ஐ. தே. கட்சி உறுப்பினர் ஒருவரும் ஒருவரையொருவர் தாக்க முற்பட்டதாக பொலிசில் புகாரிடப்பட்டுள்ளது. இது குறித்து விசாரணை நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

### மட்டு நகர் திருமணவீட்டில் கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் திருமண வீடொன்றினுள் நள்ளிரவு வேளையில் பிரவேசித்த இரு முகமூடி நபர்கள் அவ் வீட்டிலிருந்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் உடைகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையர் இருவரும் முகமூடி அணிந்து கைக்குண்டு வைத்திருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது மட்டு நகர் பாரதி வீதியிலுள்ளவீடுஒன்றே கடந்தவாரம் கொள்ளைக்கு இலக்கானது அவ்வீட்டில் திருமணம் நடந்து முடிந்து மறுநாள் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. மணப்பெண்ணின் கூறைச் சேலைகூட கொள்ளை இடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### தோட்டாவுடன் நுழைந்தார்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தினுள் ரைபிள் தோட்டாக்களுடன் நுழைய முயன்ற வேளையில் அமெரிக்கப் பிரஜையான இலங்கையர் ஒருவர் தூதரக பாதுகாப்பு அதிகாரிகளால் பொலிசிடம் ஒப்படைக்கப்பட்டார்.

களனியைச் சேர்ந்த அதிகாரிகே தொன்கனத் விஜித பெரேரா என்பவர் அமெரிக்கத் தூதுவரைச் சந்திக்க வேண்டும் எனக் கூறிக்கொண்டு அமெரிக்க தூதரகத்துக்கு சென்றார் என்றும்,

அவரிடம் இருந்த ப்ரீப் கேஸை பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையிட்டனர் என்றும், அப்போது நான்கு ரைபிள் தோட்டாக்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்றும் இதனை அடுத்து அவர் பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டார் என்றும் தெரிவிக்கப் படுகிறது

சந்தேக நபர் தீவிரவாத இயக்கம்ஒன்றுடன் தொடர்புடையவரா என்பதை கண்டறிய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரவில தடுப்பு முகாமில் தொடர்ந்து உண்ணாவிரதம்

(கொழும்பு)

வீரவில தடுப்பு முகாமில் உள்ள தென்னிலங்கை தீவிரவாத சந்தேக நபர்களில் 87 பேர் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தம்மை விடுதலை செய்யும்படி கோரி கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். விடுதலை செய்யும்வரை உண்ணாவிரதத்தைக்கைவிடப்போவதில்லை எனவும் இவர்கள் அறிவித்துள்ளனர் என்றும்,

நீராகாரங்களைக்கூட இவர்கள் தவிர்த்து வருகின்றனர். இதனால் சிலர் சக்தியிழந்தவர்களாகக் காணப்படுகின்றனர் என்றும்,

இந்த முகாமைச் சுற்றி பொலிஸ் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேநேரம் பூஸா, பெலவத்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அறியப்படுகிறது

# பண்டா குடும்பத்தை சேராதவர் தலைமை பதவி ஏற்கவேண்டும்

**- அநுரா தெரிவிப்பு**

(கொழும்பு)

பண்டாரநாயக்கா குடும்பத்தைச்சேராதஒருவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியைப் ஏற்கவேண்டும். அந்த நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பீடம் தகுந்த நபருக்கு தகுதியான இடத்தை வழங்கவில்லை என அவர் தெரிவித்தார்.

அதேசமயம் தனது தாயார் ஆகிய சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சித் தலைமையைக் கையளிக்கும் போது அப்பதவிக்கு தான் போட்டியிடவுள்ளதாயும் அநுரா குறிப்பிட்டார்.

மேலும் பின்கதவால் கட்சிக்குள் நுழைந்தவர்கள் கட்சியில் முக்கிய பதவிகளைப் பெற வேண்டும் எனின் சரியான வழிமுறைகளைப் பின்பற்றி வரவேண்டும். கட்சித் தலைமைக்கு கதை காவிச் செல்லும் கழுத்தறுப்பாளர்கள் கட்சியில் நிறைந்துள்ளார்கள்.

உட்கட்சி ஜனநாயகம் எம்மிடம் இல்லையென்றால் அது பற்றிப் பேச எமக்கு உரிமை கிடையாது எமது பிரச்சினைக்குத் தீர்வு காண சரியான வழி கட்சித் தேர்தல்களை விரைவாக நடத்துவதொன்றே தான்.


1956ம் ஆண்டின் பண்டாரநாயக்கா கொள்கைகளை இன்றைய சந்ததியினருக்கு ஏற்றதாக மீளமைக்க வேண்டும் எனவும், வத்தளையில் நடைபெற்ற கட்சியின் கருத்தரங்கொன்றில் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்

அதே சமயம், சுதந்திரக் கட்சியின் தலைமை மைத்திரிபால சேனநாயக்காவிற்கு வழங்கப்படவேண்டும் என கட்சி உறுப்பினர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரும், முன்னாள் சிரேஷ்ட அமைச்சருமான மைத்திரிபால சேனநாயக்காவின் 45வருட கால அரசியல் வாழ்வைக் கொண்டாடும் முகமாக விரிவானதிட்டங்களை கட்சித் தலைமை மேற்கொண்டு வருகிறது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துவிட்டு கட்சித் தலைமையை மைத்திரிபால சேனநாயக்காவிற்கு வழங்குவதே அவருக்குச் செய்யக்கூடிய சிறந்த பாராட்டாகும் என்று கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் தெரிவித்தனர்.

---

05 — 1976  09 — 1991

## வீரவேங்கை ஜெகன்

(ஜெயநாதன் ஜெறோம்)

வரலாற்றுக் கட்டத்தின் கட்டளையை உன்னால் அசட்டை செய்ய முடியாமல் போய்விட்டதா? நாட்டிற்காக உயிரைக் கொடுப்பது தவிர்க்க முடியாத கடமையாகக்கருதினாய்.

தமிழீழத்தின் வாலிபர் மட்டுமல்ல சிறுவர்களும் உயிரைக் கொடுக்கின்றார்கள்.

இவருடன் மணலாற்றில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கங்கள்.

25,மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

அம்மா, அப்பா,
அண்ணன்.

(3139)

---

## 90-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தாயின் மடியில்
29 — 09 — 1967



வரலாற்றின் மடியில
16 — 06 — 1992

## கப்டன் சந்தியா

(தேசிங்கம் யோகேஸ்வரி)

தமிழன்னை விழிகளிலே கண்ணீர்! - தன்
கரங்களின் விலங்கினை எண்ணி
விலங்குடைக்கப்புறப்பட்ட பெண் நீ ! - அந்த
அன்னையின் துயர்நீக்கப் போராடினாய்....
களங்கள் பல சென்று நீ, வென்றாய்....
எதிரி வரவைப் பார்த்து நீ நின்றாய்....
வீரப் பெண்புலி நீ வீரச்சா கண்டாய்
நீ கண்ட தமிழீழம் மலர்ந்திட
நாமுழைப்போம் திடமாக.

15-09-1992 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் கிரித்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

கரணவாய் மேற்கு,
இமையாணன்.

(சி/5038)

---

இளம்புலி வீரனை இவனை இழந்து
ஆண்டுகள் மூன்று ஆனது இன்று
அனபினில எமது நெஞ்சினில் நிறைந்த
அக்காச்சி இவனுக்கு அஞ்சலிசெலுத்துகின்றோம்

-அக்காச்சி எழுச்சிக்குடியிருப்பு மக்கள்

அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு
வாதரவத்தை.

(3172)

---

## நினைவு கூருகின்றோம்... 1992 - 09 - 15

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்க் கர்ப்பிணிப் பெண்.

1989 ஆம் ஆண்டு திருக்கோணமலை - கொத்திக்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். பூபதி** (அந்தோனிச்சாமி உதயகுமார் - 3-ம் கட்டை, திருக்கோணமலை)

யாழ்ப்பாணம்-நீர்வேலிப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய .

**கப்டன் ஜெகன் / அக்காச்சி** (சிவகுருநாதன் சிறிசாந்தன் - நீர்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்)

**மதன்** (வினாசித்தம்பி மதனதாஸ் - மதனா வீதி நீர்வேலி - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - திருநெல்வேலிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்இளைஞன்

1990 ஆம் ஆண்டு திருக்கோணமலை - மூதூர், நீலாப்பொல பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில வீரச்சாவெய்திய

**லெப். பார்த்தீபன்** (கனகசிங்கம் கோடீஸ்வரன் - கங்குவேலி, மூதூர், திருக்கோணமலை)

வவுனியாவில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த-

**ரகீம் / ரஜீவ்** (காசிம் துலானி - பட்டானிச்சூர், புளியங்குளம், ஓமந்தை, வவுனியா)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் கிரோராஜ்** (சண்முகசுந்தரம் பிரபாகரன் இரத்தின கிரி', அச்செழு, நீர்வேலி, யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செங்கலடி-2 ஐச் சேர்ந்த தமிழிளைஞன் - வாழைச்சேனைப் பகுதியில் முஸ்லிம் குழுவொன்றினாற் கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பெருமகன்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். வில்லியம்** (ராஜகோபால் விவேகானந்தன்- மேன்காமம், கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை)

**2-ம் லெப். மலர்விழி** (கிருபாதேவி மயில்வாகனம் மேன்காமம், கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை)

**இந்திரன் / நித்திலன்** (இராசையா பஞ்சலிங்கம் 73, 5-ம படிவம், தர்மபுரம், கிளிநொச்சி)

**பரந்தாமன்** (அருளானந்தம் அமிர்தராஜ் - தாவடி தெற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்)

**ஜெகன்** (ஜெயநாதன் ஜெரோம - 25, மடம் வீதி, யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5047)

### சிந்தனைக்கு

தவறு செய்வதில் தொடர்ந்து முனைவது தவறுக்குச் சமாதானம் ஆகாது; தவறின் சுமையை மேலும் கனமாக்கும்.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-09-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## 'மந்தம்'?

இனப்பிரச்சினையில் நிகழ்பவையெல்லாம் குழப்பகரமானவையாகவே இருக்கின்றன ஏதோ ஒரு திசையில் விவகாரங்கள் விரைவில் நகருமென்று சிறிலங்கா இராணுவ வட்டாரங்களும், அரசியல் வட்டாரங்களும் எதிர்பார்ப்பதாக பிரபல இந்தியப் பத்திரிகையான 'இந்து' தெரிவித்துள்ளது.

ஆனால் கொழும்பிலுள்ள அரசியல் விமர்சகர்களும், பத்திரிகையாளர்களும் இனப்பிரச்சினை தொடர்பாக கடந்த மூன்று வார காலமாக அரசியல், இராணுவ ஒரு மந்தநிலை உருவாகியுள்ளதாகவும், இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அரசாங்கத் தரப்பில் பெரும் குழப்ப நிலை ஒன்று உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கின்றன

பாராளுமன்றத் தெரிவுக் குழு ஓர் அரசியல் தீர்விற்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்க முடியாத நெருக்கடி நிலைக்கு உள்ளான போதே. இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் அரசியல் நடவடிக்கைகளில் முழுமையான முட்டுக்கட்டை ஏற்பட்டது. அதாவது விடுதலைப் புலிகள் இன்றி ஓர் அரசியல் தீர்வை எட்டமுடியாது என்பது ஒருபுறம் இருக்க அரசாங்கத்தைச் சார்ந்திருப்பவர்களினாலேயே இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை முன்வைக்க முடியாதநிலை ஏற்பட்டமை அரசியலில் அடுத்த கட்ட நகர்வை அரசாங்கம் மேற்கொள்ள முடியாத ஓர் நெருக்கடி நிலையை உருவாக்கியுள்ளது.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்விற்கான அரசியல் நகர்வை மீண்டும் ஏற்படுத்துவதற்கு அடிப்படையாகவுள்ள வடக்கு-கிழக்குஇணைப்புத்தொடர்பாக அரசாங்கம் தற்போதைய சூழ்நிலையில் மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பும் இல்லை விரைவில் மாகாண சபைத் தேர்தல் வரவுள்ள நிலையில் வடக்கு - கிழக்கு இணைப்பு குறித்து அரசாங்கம் வாய் திறக்கும் என எதிர்பார்க்க முடியாது.

மேலும், இராணுவ நடவடிக்கையிலும் குறிப்பிடத்தக்க மந்தநிலை ஏற்பட்டுள்ளமை தெரிகின்றது. இராணுவத்தின் எதிர்காலத்திட்டம் தெளிவாகத்தெரியாவிட்டாலும் கடந்த மூன்றுவாரமாக இராணுவ் நடவடிக்கையில் தளர்ச்சி ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சிறிலங்கா இராணுவம் இன்று பெரும் ஆள்பற்

# தியாகி திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தது ஏன்?

### - தலைவர் பிரபாகரன் அளித்த விளக்கம்

தமிழினம் இன்று மீள முடியாத அடக்குமுறைகள் என்னும் படுகுழிக்குள் படிப்படியாகத் தள்ளப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் நலனை, அபிலாசையை, அவர்களது அடிப்படை உரிமைகளைப் பேணாத இலங்கை இந்திய அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தை ஏற்கெனவே நிராகரித்தோம். இருந்த போதிலும் இந்தியப் பிரதம மந்திரி திரு. ரஜீவ்காந்தி அவர்கள் எமக்கு அளித்த உறுதி மொழிகளின் பேரில், இந்தியாவின் மீது நாம் கொண்ட நம்பிக்கையின் பேரில் நாம் எமது ஆயுதங்களை கையளித்தோம்.

ஆனால் எமது ஆயுதங்களைப் பெறுவதில் இந்தியா காட்டிய அக்கறை, அவசரம் எமது அடிப்படை உரிமைகளைப் பெற்று தருவதில் காட்டவில்லை என்பதைப் பகிரங்கமாக அறிவிக்கிறோம். இந்தியாவின் அசிரத்தைப் போக்கை சிறிலங்கா அரசு பயன்படுத்தி எம்மை நிரந்தர அடிமையாக்கும் முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களைச் சிறிலங்கா அரசு இன்றுவரை நிறைவேற்றவில்லை, ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஏறக்குறைய ஒன்றரை மாதம் பூர்த்தியான போதிலும் இன்றும் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் குறிப்பாக எம் சகோதரிகள் சிறைகளில் வாடிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒப்பந்தத்தின்படி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சந்



தேகத்தின் பேரில் கைதாகியுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் விடுவிப்பதாயிருந்தது

அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டு, இடைக்கால அரசு ஏற்படுத்துவதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் இவை உருவாக்கப்படுவதற்கான சாயல் சற்றும் இல்லாத அதேநேரம் தமிழ்த் தேசிய இனத்தின் தேசியத்தை உருக்குலைக்கும் நோக்கோடு பல்லாயிரக்கணக்கான சிங்களக்குடியேற்றங்கள் ஒப்பந்தத்தின் பின் புதிது புதிதாக உருவாக்கப்பட்டு வருகிறது இக்குடியேற்றநடவடிக்கை தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவத்தை, அவர்களின் ஐக்கியத்தை, அவர்களின் இறைமையை முழுமையாகச் சீரழித்து, அவர்களை நிரந்தர அடிமையாக்கும் நோக்கோடு திட்டமிட்ட ரீதியில் சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது இதனால் வடக்கு கிழக்கு என்னும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் பறிபோகிறது. அவர்களின் தனித்துவமான மொழி சீரழிக்கப்படுகிறது. அவர்களின் கலை கலாசாரம் அழிக்கப்படுகிறது. தனித்துவமான பொருளாதாரக் கட்டமைப்பு சீர்குலைக்கப்படுகிறது.

ஒட்டுமொத்தமாகத் தமிழ் தேசிய இனத்தின் தனித்தன்மை குலைக்கப்பட்டு நீண்ட காலப்போக்கில் இலங்கை ஒரேதேசிய இனத்தைக் கொண்ட சிங்கள பௌத்த நாடாக மாற்றப்படும் என்பதில் எவ்வித ஐயமும்இல்லை. இச்சதித் திட்டம் புனர்வாழ்வு என்னும் பெயரில் தமிழர் தாயகத்தில் இடம்பெற்று வருகிறது எனவே எமது இடைக்கால அரசாங்கம் ஏற்படும் வரை சகல புனர்வாழ்வு வேலைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

> தியாகி திலீபன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த தன் அரசியல் நிர்ப்பந்தங்களை எடுத்து விளக்குகிறார் தலைவர் பிரபாகரன். ஐந்து ஆண்டுகளுக்குமுன்னர் திலீபன் உண்ணா நோன்பு ஆரம்பித்த வேளையில் இந்தக் கொள்கை விளக்க அறிக்கைவெளியிடப்பட்டது.

அத்துடன் 20,000த்திற்கு மேற்பட்ட மக்களினதும் 650ற்கு மேற்பட்ட போராளிகளினதும் தியாகத்தால் தமிழர் தயாகத்தில் உருவான ஒரு தனித்தன்மையைச் சீர்குலைத்து எமது தாயகத்தைத் தனது ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வரவே சிறிலங்கா அரசு இன்று ஏற்பட்டுள்ள தற்காலிக அமைதியைப்பயன்படுத்துகிறது. தமிழ் பேசும் மக்கள் இத்தனை இழப்புக்களின் மத்தியிலும் நடாத்திய விடுதலைப் போரில் அடிப்படை இலட்சியங்கள் ஒன்று கூட நிறைவேற்றப்படவில்லை. மாறாக, தமிழீழப் பகுதியெங்கும் மீண்டும் அவசர அவசரமாக பொலிஸ் நிருவாகம் கொண்டுவரப்படுகிறது. ஏராளமான பாடசாலைகள் இன்றும் சிறிலங்கா அரசின் இராணுவ முகாம்களாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறன. கிழக்கில் இன அழிப்பு நடவடிக்கைதொடந்து கொண்டேயிருக்கின்றன இந்நிலையில் தமிழினத்தை முழுமையாக அடக்கி ஒடுக்குவதற்கான இந்நடவடிக்கைகளுக்கு எதிராகவும், எமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும் ஆயுதங்களைக் கையளித்துள்ள நிலையிலுள்ள நாம், அகிம்சை ரீதியில் அதி உச்ச போராட்டமான சாகும் வரை உண்ணாவிரத்தில் இறங்கியுள்ளோம்.

# பாட்டாளி மக்கள் கட்சி மீது உடன் நடவடிக்கை எடுக்குக

### -பாரதீய ஜனதா கோரிக்கை

(சென்னை).

தமிழகத்தில் புலிகளை ஆதரிக்கும் பாட்டாளி மக்கள்கட்சி மீதும் இதர சில சக்திகள்மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலப் பிரிவு கோரியுள்ளது.

இதன் பொதுச் செயலாளர் எல். கணேசன் நேற்றுச் சென்னையில்செய்தியாளரிடம் பேசுகையில்அரசுஉடன்நடவடிக்கை எடுக்கவில்லைஎன்றால் தமிழகத்தில் பயங்கரவாதிகளின் கை ஓங்கும் என்று எச்சரித்தார்.

...ட்டில் புலிகளுக்கு ஆதரவாக உரைகள் நிகழ்தப் பட்டதைச் சுட்டிக் காட்டி தமிழக அரசின் மெத்தனப் போக்கு இவர்களை இந்த அளவிற்கு ஊக்கியிருக்கிறது என்று குற்றம் சாட்டினார். இத்தகைய பிரிவினைவாதக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் எவ்வாறு கலந்து கொண்டார் என்றும் அவர் கேட்டார்

இதற்கிடையில் இதே காரணத்திற்காகப் பாட்டாளி மக்கள் கட்சியின் மீது உடனடியாக நடவடிக்கை மே...

...டர் சுப்பிரமணியம் சுவாமியும் கேட்டுள்ளார்

சென்னையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய சுப்பிரமணியம் சுவாமி பாட்டாளி மக்கள் கட்சிப் பேரணியில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் படத்தை எடுத்துச் சென்றதற்காக நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் புலிகளுக்கும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கும் தொடர்பிருக்கிறது என்று ஏற்கனவே நான்

# கண்டி விகாரை பிக்கு குடிபோதையில் அட்டகாசம்

(கண்டி)

கண்டி விகாரை ஒன்றைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் குடிபோதையில் கண்டி நகர வீதியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக கைது செய்யப்பட்டார் பொலிசார் பிக்குவை மருத்துவ பரிசோதனையின் பின் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

குடிபோதையில் இருந்ததாகவும், வீதியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார் என்றும் பிக்கு மீது கண்டி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

நான்கு வருடங்களுக்கு முன் பௌத்த பிக்குவாகச் சங்கத்தில் சேர்ந்து கொண்ட இவரைப் பொலிசார் கைது செய்யும் போது பிக்குகளின் ஆளடையாள சீவராடையில் இல்லாமல் சாரமும், ஷேர்ட்டுடனும் காணப்பட்டார் தலதாமாளிகைக்கும் செங்கலகட பௌத்த நிலையத்துக்குமிடையில் இவர் கைது செய்யப் பட்டார்.

நடுத்தர வயதினரான இந்தப்பிக்கு நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதிபதி ரியூடன் குணரெட்னா 2,000 ரூபா அபராதம் விதித்தார்.

னாலேயே இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை முன்வைக்க முடியாதநிலை ஏற்பட்டமை அரசியலில் அடுத்த கட்ட நகர்வை அரசாங்கம் மேற்கொள்ள முடியாத ஓர் நெருக்கடி நிலையை உருவாக்கியுள்ளது.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்விற்கான அரசியல் நகர்வை மீண்டும் ஏற்படுத்துவதற்கு அடிப்படையாகவுள்ள வடக்கு-கிழக்குஇணைப்புத்தொடர்பாக அரசாங்கம் தற்போதைய சூழ் நிலையில் மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பும் இல்லை விரைவில் மாகாண சபைத் தேர்தல் வரவுள்ள நிலையில் வடக்கு - கிழக்கு இணைப்பு குறித்து அரசாங்கம் வாய் திறக்கும் என எதிர்பார்க்க முடியாது.

மேலும், இராணுவ நடவடிக்கையிலும் குறிப்பிடத்தக்க மந்தநிலை ஏற்பட்டுள்ளமை தெரிகின்றது. இராணுவத்தின் எதிர்காலத்திட்டம் தெளிவாகத்தெரியாவிட்டாலும் கடந்த மூன்றுவாரமாக இராணுவ் நடவடிக்கையில் தளர்ச்சி ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சிறிலங்கா இராணுவம் இன்று பெரும் ஆள்பற்றாக்குறையை எதிர் நோக்குவதாகவும், ஆள்திரட்டல் முயற்சிக்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது இது விடயத்தில் அண்மையில் மாத்தளையிலுள்ள இராணுவ தென் பிரிவுத்தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இராணுவ ஆள்திரட்டும் நேர்முகப்பரீட்சைக்கு ஆக இரண்டே இரண்டு பேர் மாத்திரம் வந்திருந்ததை பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். அதிலும் லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட வடமாகாண உயர் இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்திலிருந்து ஓடுவோர் தொகையும் அதிகரித்துள்ளது.

மேலும் இராணுவம் போரில் தம்மால் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கையையும் இழந்து வருகின்றது. அத்தோடு, இராணுவ தரப்பில் ஏற்பட்டு வரும் இழப்பானது சிங்கள மக்கள் மத்தியில் அதிருப்தியையும் போருக்கு அவர்கள் வழங்கி வந்த ஆதரவும் குறைந்து வருகின்றது இது குறித்து அண்மையில் கூட்டுப்படை தலைமையக தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவே பிரஸ்தாபித்திருந்தார் அவர் ''பாதுகாப்பு படையினருக்கு சிங்கள மக்கள் ஆதரவளிப்பதும் கௌரவிப்பதும் வெகுவாகக் குறைந்து வருகின்றது'' எனச் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான அரசியல் இராணுவப் பொருளாதாரச்சூழ்நிலைபோரைத் தொடர்ந்து நடத்துவதில் சிக்கல்களை உருவாக்கியுள்ளன தமது மொத்தச் செலவீட்டில் 25 வீதமளவில் ஆயுதப் படையினருக்கு ஒதுக்கியுள்ள சிறிலங்கா அரசாங்கத்தால் இதற்குமேலும் செலவீட்டை அதிகரிப்பதில் சிரமங்கள்ஏற்பட்டுள்ளது இதனால் போரைவிரைவுபடுத்தி நடத்துவதில் சில நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலைமைகளினால் அரசியல் இராணுவ செயற்பாடுகள் விரைவில் நகருவதற்குரிய வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளதாகத் தெரிகின்றது ஆனால் இந்து பத்திரிகை குறிப்பிட்டது போல் ஏதோ ஒரு திசையில் விரைவில் நகருமென அரசியல், இராணுவ வட்டாரங்களில் எதிர்பார்க்கப் படுமானால் அது மட்டுப்படுத்தப்பட்ட இராணுவநடவடிக்கையாகவே இருக்க வாய்ப்புண்டு ஏனெனில் அரசியல் நகர்விற்குரிய வழிகள் யாவற்றையும் சிறிலங்கா அரசாங்கம் அடைத்துள்ளது. இதேவேளை பொன்ராம் ராஜகாரியர் வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தலைவர் பதவியை மீண்டும்ஏற்றுக் கொண்டிருப்பது ஓர் திடீர்அரசியல் நகர்ச்சிக்குரிய முயற்சி ஆயினும் அதன் மூலம் அரசாங்கம் பெரிய அரசியல் நகர்ச்சி எதையும் ஏற்படுத்தி விட முடியாது அதன் விளைவு அரசிற்கு ஏமாற்றகரமானதாகவே இருக்கும்.

# பாட்டாளி மக்கள் கட்சி மீது உடன் நடவடிக்கை எடுக்குக

## -பாரதீய ஜனதா கோரிக்கை

(சென்னை)

தமிழகத்தில் புலிகளை ஆதரிக்கும் பாட்டாளி மக்கள்கட்சி மீதும் இதர சில சக்திகள்மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலப் பிரிவு கோரியுள்ளது.

இதன் பொதுச் செயலாளர் எல். கணேசன் நேற்றுச் சென்னையில்செய்தியாளரிடம் பேசுகையில்அரசுஉடன்நடவடிக்கை எடுக்க வில்லைஎன்றால் தமிழகத்தில் பயங்கரவாதிகளின் கை ஓங்கும் என்று எச்சரித்தார்.

சென்னையில் நடைபெற்ற பாட்டாளி மக்கள்கட்சி மாநாட்டில் புலிகளுக்கு ஆதரவாக உரைகள் நிகழ்தப் பட்டதைச் சுட்டிக் காட்டி தமிழக அரசின் மெத்தனப் போக்கு இவர்களை இந்த அளவிற்கு ஊக்கியிருக்கிறது என்று குற்றம் சாட்டினார். இத்தகைய பிரிவினைவாதக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் எவ்வாறு கலந்து கொண்டார் என்றும் அவர் கேட்டார்

இதற்கிடையில் இதே காரணத்திற்காகப் பாட்டாளி மக்கள் கட்சியின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியும் கேட்டுள்ளார்

சென்னையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய சுப்பிரமணியம் சுவாமி பாட்டாளி மக்கள் கட்சிப் பேரணியில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் படத்தை எடுத்துச் சென்றதற்காக நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் புலிகளுக்கும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கும் தொடர்பிருக்கிறது என்று ஏற்கனவே நான் தெரிவித்த குற்றச் சாட்டிற்கு அதுவே நிருபனமாகுமென்றார்.

# சவுதிக்கு எவ் 15 விமான விற்பனை; இஸ்ரேலின் மேலாண்மை பாதிக்கும்

(வாஷிங்டன்)

அமெரிக்கா சவுதி அரேபியாவுக்கு எப்- 15ரக யுத்த விமானங்கள் 72 இனை விற்பனை செய்வதற்கு தீர்மானித்திருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

மேற்படி அறிவிப்பை ஜனாதிபதி புஷ் தேர்தலில் வெற்றி பெறும் நோக்குடனேயே நிறைவேற்றியிருப்பதாக ஜனநாயக கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அதேநேரம் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை டெல் அவிவின் இராணுவ மேலாண்மையை பாதிக்கும் என இஸ்ரேல் வன்மையாக எதிர்த்துள்ளது.

எனினும் இதனால் இஸ்ரேலின் நிலை எவ்விதத்திலும் பாதிப்படையமாட்டாது என ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்

சவுதிக்கு மேற்படி 72 விமானங்களை விற்பதன்மூலம் 45 மாநிலங்களில் 40,000 தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற முடியும் என வெள்ளை மாளிகை காரணம் காட்டுகிறது.

1996 ஆம் ஆண்டில் விமானங்கள் பொருத்தல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் எனவும் 1998, 1999-ம்ஆண்டுகளில் விமானங்களை விநியோகிப்பது ஆரம்பமாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# மனித உரிமை குழுவிற்கு இந்தியா அனுமதி மறுப்பு

(டில்லி)

மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை இந்தியாவில் மனித உரிமை மீறலைப் பார்வையிட தாம் அனுமதிக்க முடியாது என்று இந்தியாவின் ஆளும் கட்சியான இந்திரா காங்கிரஸ் கூறியுள்ளது.

இன்று பிரதமர் நரசிம்மராவ் கூட்டும் முதலமைச்சர்கள் மாநாட்டில் மனித உரிமைகள் மீறலைக் கண்காணிக்க அரசு சார்பில் ஒரு ஆணைக் குழு அமைப்பது குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

முன்னதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் இந்தியாவின் காஷ்மீர் மாநிலமான ஜம்மு காஷ்மீரில் இந்திய அரசுப் படைகளால் மேற்கொள்ளப்படும் மனித உரிமைகள் மீறல் பற்றிக் கடுமையாகக் குறைகூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பஞ்சாப்பில் வெள்ளம்; 1700 பேர் உயிரிழப்பு

(டில்லி)

பஞ்சாப்பில் பெரும் மழையைத தொடர்ந்த வெள்ளப் பெருக்கினாலும், மண்சரிவுகளினாலும் இதுவரை 1700 பேர் வரை பலியாகியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இதேசமயம் ஜம்முகாஷ்மீர் பகுதியில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக பிரதமர் நரசிம்மராவ் 25லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாயும் தெரியவருகிறது.

# அமெரிக்க அங்கீகாரமின்றி ஆயுத ஏற்றுமதி

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவின் அங்கீகாரமின்றி அமெரிக்க ஏவுகணைகளையும் குண்டுகளையும் ஈரான் - ஈராக் யுத்தத்தின் போது ஈராக்கிற்கு சவுதி அரேபியாவும், குவைத்தும் ஏற்றுமதி செய்ததாக லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளையும் 1500 குண்டுகளையும் யுத்த காலத்தின் போது சவ்தியும், குவைத்தும் ஈராக்கிய தலைவர் சதாம் ஹுசைனுக்கு கப்பலில் அனுப்பி வைத்ததாக டைம்ஸ் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

எட்டு வருட கால ஈரான்-ஈராக் யுத்தத்தின் போது அநேக அரபுநாடுகள் ஈராக்கை ஆதரித்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்டி விகாரை பிக்கு குடிபோதையில் அட்டகாசம்

(கண்டி)

கண்டி விகாரை ஒன்றைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் குடிபோதையில் கண்டி நகர வீதியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக கைது செய்யப்பட்டார் பொலிசார் பிக்குவை மருத்துவ பரிசோதனையின் பின் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

குடிபோதையில் இருந்ததாகவும், வீதியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார் என்றும் பிக்கு மீது கண்டி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

நான்கு வருடங்களுக்கு முன் பௌத்த பிக்குவாகச் சங்கத்தில் சேர்ந்து கொண்ட இவரைப் பொலிசார் கைது செய்யும் போது பிக்குகளின் ஆளடையாள சீவராடையில் இல்லாமல் சாரமும், ஷேர்ட்டுடனும் காணப்பட்டார் தலதாமாளிகைக்கும் செங்கலகட பௌத்த நிலையத்துக்குமிடையில் இவர் கைது செய்யப் பட்டார்.

நடுத்தர வயதினரான இந்தப்பிக்கு நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதிபதி ரியூடன் குணரெட்னா 2,000 ரூபா அபராதம் விதித்தார்.

### படையினர் சிகிச்சை பெறுவதால்

# வவுனியா ஆஸ்பத்திரிக்கு இராணுவம் பாதுகாப்பு

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் அதிகளவில் காயமடைந்து சிகிச்சை பெற வருவதனால் வவுனியா அரசாங்க வைத்தியசாலை இராணுவத்தினரால் சுற்றி வளைத்து பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களினால் ஏராளமான இராணுவத்தினர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றமை தெரிந்ததே.

வவுனியா வைத்தியசாலையில் விசேட வார்ட் ஒன்றில் காயமடையும் இராணுவத்தினர் மற்றும் பொலிசாருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. படையினரின் பாதுகாப்புக் கருதியே இது மேற்கொள்ளப்படுகிறது. (தி)

### வடக்கு-கிழக்கு மாகாண சபை

# இராஜகாரியர் பொறுப்பேற்பு குழுக்கள் மத்தியில் குழப்பம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தலைவர் பொன்ராம் ராஜகாரியர் தானாகவே திருமலை சென்று மீண்டும் தலைமைப் பதவியை ஏற்றிருப்பது கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈ.பி.ஆர்.எல்.எப். குழுவின் உறுப்பினரான பொன்ராம் இராஜகாரியரின் இந்த நடவடிக்கைக்குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாதெனவும், இம்முடிவு குறித்து தம்முடன் கலந்தாலோசிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

தலைவர் பொறுப்பை மீண்டும் ஏற்றவேளையில் ராஜகாரியர் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுனரையும், அப்பகுதியிலுள்ள முக்கிய பிரமுகர்களையும் சந்தித்துப் பேசியிருக்கின்றார். மாகாணசபைக் கூட்டம் இப்பொழுது நடைபெறுவதில்லை. அத்துடன் ஒரு அமர்விற்கென உறுப்பினர்களை அழைக்க முடியாத நிலையும் இப்பொழுது நிலவுகின்றது. எனவே சபாநாயகர் கடமைகளை ஒத்த பணியைக் கொண்ட மாகாண சபைத் தலைவர் ஒருவரால் என்ன செய்ய முடியும்? இவர் மீண்டும் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன்பின்னணியில் உள்ள திட்டம் என்ன? எவருடைய ஆதரவில் இவர் திருமலைக்கு திரும்பினார் என்பவை குறித்தும் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் குழப்பமடைந்துள்ளன.

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி-யாழ். பிரதேச ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் புதிய நிர்வாகசபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (18.9 92) பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பிரதேச தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்

# ஆளும் கட்சியினர் தேர்தல்களில் பாரபட்சமாக நடக்கின்றனர்

## 'சார்க்'எதிர்க்கட்சிதலைவர்கள் குற்றச்சாட்டு

தேர்தல்களின் பொழுது ஆட்சியில் உள்ளவர்கள் பாரபட்சமாக நடந்து கொள்கின்றனர் முடிவுகளை தமக்கு சாதகமாக மாற்றிக் கொள்கின்றனர்எனசார்க் நாடுகளின் எதிர்சுகட்சி தலைவர்கள் குற்றம் சாட்டினர்.

மேலும் இதைத் தவிர்ப்பதற்கு அதிகாரத் தலையீடுகள் எதுவும் அற்ற சுயேச்சையான குழுவினாலேயே தேர்தல் நடாத்தப்பட வேண்டும். ஒவ்வொரு சார்க் அங்கத்துவ நாட்டிலும் இந்த ஏற்பாடு செய்யபபட வேண்டும் எனவும் அவர்கள்வெளியிட்ட கூட்டறிக்கை தெரிவித்தது.

பெனாசிர் பூட்டோ, வி.பி. சிங், சேய்க ஹசினா, அநுரா பண்டாரநாயக்கா, அட்ஹிகாரி ஆகிய 5 தலைவர்களுமே இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தேர்தலில் கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் அவை எதிர்க்கட்சியில் இருந்தால் என்ன ஆளும் கட்சியில் இருந்தால் என்ன அரசு பணம் வழங்க வேண்டும் பல்வேறு அரசியல் வேலை கட்குபயிற்சியளிக்கவும், ஆய்வுகளுக்கும் இப் பணம் பயன்படுத்தப்படும்.

மேலும் சார்க் நாடுகளில் தேர்தல்கள் நேர்மையாயும், ஒழுங்காயும் நடாத்தப்படுவதை பிராந்திய மட்டத்தில் உறுதிப்படுத்த வேண்டும்.

கராச்சியில் நிரந்தர ஒருங்கிணைப்பு செயலகம் ஒன்றை அமைக்க வேண்டும் எனவும் அங்கத்துவ நாடுகட்கு இடையேயான பிரச்சினைகளை அமைதியாயும் அரசியல் வழியிலும் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

மேலும் கிரமமாக சந்தித்து தகவல்களைப் பரிமாறிக் கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

## ஜே. வி. பி. கண்ணிவெடிக்கு பதில் அமைச்சர் தப்பினார்

(கொழும்பு)

உணவுக் கூட்டுறவுத்துறை பதில் அமைச்சர் ரவீந்கிர சமரவீர ஜே. வி. பியினர் வைத்ததாகக் கருதப்படும் கண்ணிவெடியொன்றிற்கு உயிர்தப்பியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துருகிரிய என்னும் இடத்தில் அமரகொட வீதியில் மதவொன்றின் கீழ் கண்ணிவெடியொன்று வைக்கப்பட்டிருந்ததாகவும் ஆனால் அக்கண்ணிவெடி வெடிக்காமையால் அவர் உயிர்தப்பியதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கண்ணிவெடி தொடர்பாக ஜே. வி பி. சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இன்றுமுதல் தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் வெளியூர் தபால்கள் அனைத்தும் இன்று விநியோகிக்கப்படும் என யாழ் தபால் அத்தியட்சகர் தெரிவித்தார்.

குமண கப்பல் மூலம் எடுத்தவரப்பட்டு பருத்தித்துறையில் இறக்கப்பட்ட 275 தபால் பொதிகளும் நேற்று இரவு தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டன.

இவை நேற்று இரவே தரம் பிரிக்கப்பட்டன இன்று முதல் விநியோகம் ஆரம்பமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச.க)

## இந்தியத் தூதுவர் இளைப்பாறுகிறார்

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரான நாகேந்திரநஞ்ஜா இந்த வருட முடிவில் வெளியுறவு சேவையிலிருந்து இளைப்பாறக் கூடுமெனவும் அவரது இடத்திற்கு வெளியுறவு விவகாரங்களில் தேர்ச்சி மிக்கவரான நரேஷ் தயாள் நியமிக்

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

1992 ஆம் ஆண்டு 3 ஆம் கந்தாயத்துக்கான ஆதன வரியை 30-09-92 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்வரும்

## வீதி விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் வெவ்வேறு இடங்களில் நேற்று நடைபெற்ற வீதிவிபத்துக்களில் இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

எஸ். காசிநாதன் (39வயது) [சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம்] இ செல்வன் (31வயது) [அண்ணாசிலையடி டேவிட வீதி, குருநகர், யாழ்ப்பாணம்] ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். இவர்கள் இருவரும் தற்போது சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)

# புலிகளுடன் தொடர்பில்லை; கருணாநிதி கூற்று ஏற்பதற்கில்லை

## -வாழப்பாடி

(சென்னை)

புலிகளுக்கும் தி மு க.விற்கும் தொடர்பு இல்லையென கருணாநிதி கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மீது தி.மு கவிற்கு இருந்த அனுதாபம் ராஜீவ் கொலையின் பின் முடிந்து விட்டதாக கருணாநிதி கூறியுள்ளார். அதேவேளை கருணாநிதியின் உறவினரும் தி மு.க தலைவர்களில் ஒருவருமான மாறன், தி மு.க.விற்கும் புலிகளுக்கும் உள்ள உறவு தொப்புள்கொடி உறவு என சமீபத்தில் தான் பேசியுள்ளார். அதற்குள் தொப்புள் கொடி எப்படி அறுந்ததென்று தெரியவில்லை எனவாழப்பாடி பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பத்மநாபா கொலை வழக்கில் கைதான வை. ரவிக்கும் தி மு.க.விற்கும் தொடர்பு இல்லையென கருணாநிதி கூறியுள்ளார். ஆனால் மறுநாளே ரவிக்கான வழக்கிற்கு நிதி வசூலிக்க கருணாநிதி ஆரம்பித்தார்.

புலிகள் விடயத்தில் தி மு க எப்போதுமே இரட்டை வேடமிட்டே வந்துள்ளது தி மு. க. ஆட்சியின் போது யாழ்ப்பாணம் போய் புலிகளைச் சந்தித்து வந்தவர் வை கோபாலசாமி அது பற்றி தனக்கு எதுவும் தெரியாதென அப்போதைய முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்திருந்தார்

ஆனால் யாழ்ப்பாண பயணம் குறித்து தி. மு. க. தலைமையகத்தில் தான் கோபாலசாமி பேட்டியளித்தார்.

பூனை சைவமாகி. காவி தரித்து கங்கைக்கு குளிக்கச் சென்ற கதைபோல் உள்ளது கருணாநிதியின் நடவடிக்கைகள் என வாழப்பாடி மேலும் தெரிவித்தார்.

# கனரக ஆயுதங்களை விற்க இந்தியா தயாராக உள்ளது

## – ஜெனரல் கோவிந்தன்

[டில்லி]

இந்தியா வெளிநாடுகளுக்குச் சாதாரண போர் ஆயுதங்கள் மட்டுமன்றி டாங்கிகளையும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் பாதுகாப்புத் தளபாட உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று இந்திய ஆயுதத் தொழிற்சாலை இயக்குநர் ஜெனரல் எஸ். கோவிந்தன் தெரிவித்துள்ளார்.

கான்பூரிலுள்ள ஆயுதத் தொழிற்சாலைக்கு முதல் முதலாகப் பத்திரிகையாளரை அனுமதித்த அவர், 1990 இல் ஆயுதங்கள் ஏற்றுமதி பெருமளவில் இல்லை தற்போது உற்பத்தி பெருகியுள்ளதால் உலகச் சந்தையில் போர்க் கருவிகளை விற்பனை செய்யத் தயாராக இருக்கிறோம் என்றார்.

# திருத்திய வரலாற்று நூல் திங்கள் வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 9 இற்கான திருத்திய வரலாற்று நூல் வெளியீட்டு வைபவம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

மேற்படி வைபவத்திற்கு சகல பாடசாலை அதிபர்களும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். மேலும் தங்கள் பாடசாலையில் சமூகக் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களும், மாணவப் பிரதிநிதிகளாக உங்கள் பாடசாலையில் இருந்து ஐந்து பேர் கலந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவும். நிகழ்ச்சி நிரலும் முறையான அழைப்பிதழும் சம்மந்தபபட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும என யாழ் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# முடியுமானால் கைது செய்யுங்கள் உடுகம்பொல சவால்

5000 விசேட அதிரடிப் படைக்கொமாண்டோக்களை ஈடுபடுத்தியாவது முடியுமானால் என்னை கைது செய்யுங்கள் என ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு சவால் விட்டு முன்னாள் டி ஐ ஜி உடுகம்பொலஎழுதியதாக கருதபடும் கடிதமொன்று கடந்தவாரம் வெளியிடப்பட்டது.

'யுக்திய' என்ற சிங்களப் பத்திரிகையில் 500 பொலிஸ் கொமாண்டோக்கள் உடுகம்பொலவைக் கைது செய்ய ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என வெளியான செய்தியை அடுத்தே மேற்படி கடிதம் எழுதப்பட்டதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1988-ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் எதிரிகள் 'கறுப்புப் பூனைகள்' என்ற கொலைப் படையினால் அழிக்கப்பட்டனர் ஆனால் அக்கொலைகளைப் பாதுகாப்புப் படையினரே செய்தனர் என மக்கள் கருதினர் இதனால் படையினரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதென முன்னாள்

கூறிய தனது வேண்டுகோள் செவிமடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டார் மேற்படி படுகொலைகள், படுகொலை முயற்சிகள் பற்றிய தகவல்கள் தன்னிடம் முழுமையாக உள்ளதாயும் அதற்கு பொறுப்பானவர்களை அது இனங் காட்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸ் தன்னில் இரக்கத்துடன் இருப்பதாயும், அரசில் அது நம்பிக்கையிழந்துவிட்டதாயும் அதனாலேயே தன்னை கைது செய்ய முடியாதுள்ளதாயும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## இலங்கையர்

தாகவே தெரிகிறது. சாந்தகுமார்குமாரசுவாமி (40வயது) கனடாவில் பாஸ்போர்ட் மோசடிகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்தார். 22ஜூன் 1990-ல் பாஸ்போர்ட் மோசடிகள் தொடர்பாக மூன்றாண்டுசிறைத்தண்டனை விதிக்கப்பட்ட இவர் பிணையில் விடுவிக்கப்பட்டபோது மீண்டும் பாஸ்போர்ட் மோசடியில் ஈடுபட்டதான குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

## வீரச்சாவு

வடக்கு மானிப்பாய்) வீரவேங்கை கதிரவன் (தம்பிப்பிள்ளை - சசிக்குமார் அராலி வீதி புதுக்குடியிருப்பு யாழ்ப்பாணம்) ஆகிய இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள்

# ஐந்துவருட காலத்திற்கு 500 ரூபா புனர்வாழ்வு நிதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்படைந்த மக்களுக்கு கடந்த ஐந்து வருட காலத்தில் புனர்வாழ்வுக்கென ஐந்நூறு ரூபாவை மட்டும் சிறிலங்கா அரசு வழங்கியுள்ளது-

1987 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக நாசமாக்கப்பட்டுவரும் பட்டிருப்பு பட்டணம் இதுவரை புனர் நிர்மாணம் செய்யப்படவில்லை- பட்டிருப்பு பிரதேசத்தில் 50 கிராமங்களில் வசிக்கும் மக்

கிராமங்களின் மக்களினதும் அத்தியாவசிய சேவைகளைப் பூர்த்திசெய்து வந்த களுவஞ்சிக்குடி கிராமம் முற்றாக அழிந்துபோயுள்ளது-

இப்பகுதி மக்கள் புனர்வாழ்வு, நிவாரண கோரிக்கைகளை அனுப்பி வைத்தும் இதுவரை உதவிகள் எதுவும் கிட்டவில்லை- இது குறித்து சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த மகஜரும் இதுவரை பலன் ஏதும் அளிக்கவில்லை. இவ் அழிவுகளை சம்பந்தப்பட்ட எவரும் வந்து பார்வையிடவும் இல்லை-

1987முதல் 1992 வரையான

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

# ஆதனவரி அறிவித்தல்

1992 ஆம் ஆண்டு 3 ஆம் கந்தாயத்துக்கான ஆதன வரியை 30-09-92 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்வரும் விபரப்படி வெலியாத்துப்பணம் அறவிடப்படுமெனவும், 4 ஆம் கந்தாயத்துக்கான வரியை அக்கந்தாயத்தின் முதல் மாதத்துக்குள் 5% வரிக் கழிவுடன் செலுத்தலாமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக் காணிகள் ) 15%
குடியிருப்புக் காணிகள் )
இவையல்லாத காணிகளுக்கு 20%

காசோலைகள், காசுக்கட்டளைகளை, அஞ்சல் கட்டளைகளை ''யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின்'' சார்பில், அஞ்சல் சேவையில் அனுப்பும்போது அஞ்சல் சேவையில் ஏறபடும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது வரியிறுப்பாளர்கள் ஆதனங்களின் வரியதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் ஆகிய விபரங்களையும் தயவுசெய்து இணைக்குக.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
14-09-1992

[5051]

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் கிஸ்ணமூர்த்தி

புங்குடுதீவு 5-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிஸணமூர்த்தி 13-09-1992 அன்று காலமாகி விட்டார் இவர் சுப்பிரமணியம் கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், நித்தியலட்சுமி, அருள்ராஜா (ஜேர்மனி), திலகேஸ்வரி (இந்தியா), கனகேஸ்வரி (இந்தியா), உதயமூர்த்தி, லக்மணமூர்த்தி, விகனேஸ்வரி, பாஸ்கரமூர்த்தி ஆகியோரின் சகோதரரும், க. சோமசுந்தரம், செல்வராஜா (இந்தியா), நடேசலிங்கம் (இந்தியா), அ. சுசீலா, உ சரோஜாதேவி, இ. இதயா ஆகியோரின் மைத்துனரும், ருபேஸ்குமார், லிங்கேஸ்வரன், லோஜினி, பிறம்பிளா, பிரகாஸ், கிரிசாந்தினி, ரிசாந் ஆகியோரின் மாமனாரும், கிஸ்ணரூபன், பிரிந்தாபன், கார்த்திகாஜினி, அபிராமி, பால்ராஜ், நிருபா, தமிழினி, மயூரா, மைதிலி ஆகியோரின் சிததப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமச்கிரியைகள் இன்று (15-09-92) பி ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பையன் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பொ. ரகுநாதன்.
(3170)

பூப்பொழில், நாவலர் வீதி,
ஐந்து சந்தி.
யாழ்ப்பாணம்.

தியட்சகர் தெரிவித்தார்.

குமண கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு பருத்தித்துறையில் இறக்கப்பட்ட 275 தபால் பொதிசளும் நேற்று இரவு தபாலகததிற்கு எடுத்துவரப் பட்டன.

இவை நேற்று இரவே தரம் பிரிக்கப்பட்டன இன்று முதல் விநியோகம் ஆரம்பமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச.க)

## இந்தியத் தூதுவர் இளைப்பாறுகிறார்

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரான நாகேந்திரநந்ஜா இந்த வருட முடிவில் வெளியுறவு சேவையிலிருந்து இளைப்பாறக் கூடுமெனவும் அவரது இடத்திற்கு வெளியுறவு விவகாரங்களில் தேர்ச்சி மிக்கவரான நரேஷ் தயாள் நியமிக்கப்படலாம் என்றும் டில்லியிலிருந்து வரும் தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

## பதவிஏற்கும் இறுதிதினம் இன்றாகும்

(கொழும்பு)

பிரதேசச் செயலாளர்கள் அனைவரும் பதவியேற்பகற்கான இறுதித் தினம் இன்றாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றுபதவியேற்கத் தவறும் இடத்து அவர்கள் பதவி இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள் என உள்துறை அமைச்சு எச்சரித்துள்ளது.

நிர்வாகச் சேவையில் உள்ள மூத்த அதிகாரிகளேபிரதேசச் செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். நாடெங்கும் 206 பிரதேச செயலகங்கள் நிறுவப் பட்டுள்ளன.

### படையினர்

வில்லை.

அதேநேரம் சிலசில இராணுவ நடவடிக்கைகள் நடைபெறும் என்றும், அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பாரிய அளவிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருளாதாரமும் இடம் கொடுக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்கின்ற மக்கள் இராணுவ நடவடிக்கை இடம் பெறாத இடத்தில் குடியேறுகின்றனர் இதனால் ஏற்படும் அகதிகள் பெருக்கத்தினால் பொருளாதார ரீதியாக பாதிப்பு ஏற்படுகிறது.

ஆகவே அகதிகளை பெருக்கிக் கொள்ள அரசு விரும்பவில்லை என்பதால் இராணுவ நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கடிதமொன்று கடந்தவாரம் வெளியிடப்பட்டது

'யுக்திய' என்ற சிங்களப் பத்திரிகையில் 500 பொலிஸ் கொமாண்டோக்கள் உடுகம் பொலவைக் கைது செய்ய ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என வெளியான செய்தியை அடுத்தே மேற்படி கடிதம் எழுதப்பட்டதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

1988-ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் எதிரிகள் 'கறுப்புப் பூனைகள்' என்ற கொலைப் படையினால் அழிக்கப்பட்டனர் ஆனால் அக்கொலைகளைப் பாதுகாப்புப் படையினரே செய்தனர் என மக்கள் கருதினர் இதனால் படையினரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதென முன்னாள் டி ஐ ஜி உடுகம்பொல கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக உடுகம்பொலமீதுகுற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே. மேலும் கறுப்புப்பூனைகளை கலைத்து விடும்படி

### வர்த்தக

யும் விண்ணப்பப் படிவங்களுடன் இணைத்து அனுப்பி புதுப்பித்த வர்த்தக (நிரந்தர) அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளனர்

### வடக்கு

பட்ட உளவுப் பிரிவில் அங்கத்துவம் வகித்த இராணுவ அதிகாரிகளையும் உள்ளடக்கியதாக இவ் புதிய அமைப்பு நிறுவப்படும்.

இந்த உளவு அமைப்பிற்கு தகவல்களைப் பெறுவதற்கு வடக்கு கிழக்கில் புலிகள் விரோத குழுக்களின் செயற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப் படுகிறது.

அதே சமயம் எதிர் வரும் மூன்று மாதங்களுள் புலிகளிடம் உள்ள பிரதான நகரங்களைக் கைப்பற்றவும் இராணுவ அதிகாரிகள் திட்டமிட்டு வருவதாக லங்காதீப தெரிவித்துள்ளது.

### மாதம்

ரூபா தேவைப்படுவதாக அத்தியாவசிய சேவைகளின் பிரதி ஆணையாளர் ஜனாப் எம். எஸ் எம். ரபீர் தெரிவித்துள்ளார்.

### ராணுவ

காணப்படவில்லை. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதன் மூலம் மட்டும் தீர்வு காணப் பட்டுவிடலாம் என்ற நம்பிக்கையை எவ்வாறு கொள்ள முடியும் என்றும் ஐலன்ட் கேள்வி எழுப்பியுள்ளது.

### இலங்கையர்

தாகவே தெரிகிறது. சாந்த குமார்குமாரசுவாமி (40வயது) கனடாவில் பாஸ்போர்ட் மோசடிகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்தார். 22ஜூன் 1990-ல் பாஸ்போர்ட் மோசடிகள் தொடர்பாக மூன்றாண்டுசிறைத்தண்டனை விதிசகப்பட்ட இவர் பிணையில் விடுவிக்கப்பட்டபோது மீண்டும் பாஸ்போர்ட் மோசடியில் ஈடுபட்டதான குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப் பட்டிருந்தார்.

### வீரச்சாவு

வடக்த மானிப்பாய்) வீரவேங்கை கதிரவன் (தம்பிப்பிள்ளை - சசிக்குமார் அராலி வீதி புதுக்குடியிருப்பு யாழ்ப்பாணம்) ஆகிய இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### வன்னியில்

இக்கிராமங்களைச்சுற்றி பாதுகாப்பு வலையம் ஒன்று அமைக்கப்படும் எனவும்,

இப்புதிய நடவடிக்கையினால் பாதுகாப்பை உறுதிப் படுத்தக் கூடியதாக இருக்கும் எனவும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா தெரிவித்தார்

மடுக்கந்த, ஹொரவப்பொத்தான, மசா மயிலங்குளம், அம்பலன் கொடல்ய ஆகிய கிராமங்கள் அடிக்கடி புலிகளினால் தாக்கப்பட்டு வருவதாக அவர் செரிவித்தார்.

தற்சமயம் பாதுகாப்பளிப்பதற்கு வவுனியா இராணுவ முகாமில் இருந்து 2000 படையினர் ஆயத்தமாக உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்

மேலும் பேயாடிகூழாங்குளம் பகுதியிலிருந்து தொடராக மடுக்கந்த வரையிலான தொடர்காவல்அரண்கள்பலப் படுத்தப்பட்டு வருகின்றன.

நூற்றுக்கணக்கான காவல் அரண்களைக் கொண்ட இந்த இராணுவ கண்காணிப்பு வலயத்தில் ஏராளமான இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்- என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன-

### இராணுவத்திலிருந்து

பாறை மாவட்டங்களில் உள்ள பகுதிகளைப் பாதுகாக்கவும் இராணுவததினருக்குப் பெரியளவில் ஆள் பலம் தேவையாக உள்ளது ஆனால் படையிலிருந்து ஓடுவோர் தொகை அதிகரித்தது மட்டுமல்லாமல் புதிதாக இராணுவத்தில் சேர சிங்கள இளைஞர்கள் முன்வருதாகவும் இல்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது இதனால், இராணுவ தரப்பில் ஆள்பலத்தை அதிகரிப்பதில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ப்பாளர் தெரிவித்துள்ளார்.

# ஐந்துவருட காலத்திற்கு 500 ரூபா புனர்வாழ்வு நிதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்படைந்த மக்களுக்கு கடந்த ஐந்து வருட காலத்தில் புனர்வாழ்வுக்கென ஐந்நூறு ரூபாவை மட்டும் சிறிலங்கா அரசு வழங்கியுள்ளது-

1987 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக நாசமாக்கப்பட்டுவரும் பட்டிருப்பு பட்டணம் இதுவரை புனர் நிர்மாணம் செய்யப்படவில்லை- பட்டிருப்பு பிரதேசத்தில் 50 கிராமங்களில் வசிக்கும் மக்கள் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால்முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்- 50 கிராமங்களின் மக்களினதும் அத்தியாவசிய சேவைகளைப் பூர்த்திசெய்து வந்த களுவாஞ்சிக்குடி கிராமம் முற்றாக அழிந்துபோயுள்ளது-

இப்பகுதி மக்கள் புனர்வாழ்வு, நிவாரண கோரிக்கைகளை அனுப்பி வைத்தும் இதுவரை உதவிகள் எதுவும் கிட்டவில்லை- இது குறித்து சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த மகஜரும் இதுவரை பலன் ஏதும் அளிக்கவில்லை. இவ் அழிவுகளை சம்பந்தப் பட்ட எவரும் வந்து பார்வையிடவும் இல்லை-

1987முதல் 1992 வரையான ஐந்து வருட காலத்தில் புனர்வாழ்வுக்கென 500 ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது-

## திலீபன்

## 1-ம் நாள் (15-09-92)

ஊரெழு பெற்ற உத்தமன் பார்திபன்
இராசையா குடும்பத்தின் இளைய மகன் ...
நீர்கூட அருந்தாமல் தேசததைக் காக்க
போராடப் புறப்பட்ட பொன்னான நாளிது !

வெள்ளித்திரை விரித்த வானத்து வீதியிலே... - சூரியன்
அள்ளித் தண்ணொளியை இறைக்கையிலே
நல்லூரின் வீதியிலே... தியாகப் பயணத்திற்காய்
நடந்து சென்றான் எங்கள் திலீபன்!

'ஆச்சி' யொருத்தி வழிமறித்து அன்போடு நெற்றியிலே
- பாசத்தின்
சாட்சியாய் திலகமிட்டு... வாழ்த்தி வழியனுப்ப ..
மூச்செல்லாம் எம்முள் நெருப்பாய் மூண்டெர ..
வீச்சோடு மக்கள்முன் வீற்றிருந்தான் வீரன்!

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

# உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 14-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5622

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
26-0514, 27-8149, 43-1019, 42-9326. 42-9175, 24-2545, 26-5846 26-1724, 27-2004, 24-6065.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
26-7525. 27-9771, 41-6686, 22-6691, 28-159, 26-6743, 24-5121, 27-8160, 26-2373, 26-594, 24-4747, 41-2659, 28-2145, 28-2995, 26-6628, 27-5197

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.